# கார்டூனும் கருத்துச் சுதந்திரமும்

## முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்குக் கேலிச்சித்திரம்

# பின்னணியும் நோக்கமும்

*அறிமுகம்*

*நீண்டகாலமாக ஐரோப்பிய நாடுகளில் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் வெறுப்புணர்வை விதைக்கும் செயற்பாடுகள் முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. முஸ்லிம்களை தீவிரவாதச் செயற்பாட்டுடன் தொடர்புபடுத்தி, சினிமாக்களைத் தயாரித்து வந்தனர். இஸ்லாத்தின் போதனைகளைக் குறித்து தவறான கருத்துக்களை நாவல்களாக வெளியிட்டும் வந்தனர். இதன் தொடரில் நபி (ஸல்) அவர்கள் குறித்து கேலிச்சித்திரங்களை வரைந்து, தவறான சித்திரிப்புக்களை மேற்கோண்டு, சமூக வலைத் தளங்களில் பரப்பி குழப்பங்களை ஏற்படுத்தி, அரசியல் ஆதாயம் தேடிவருகின்றனர்.*

*அண்மையில், முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு பிரான்ஸில் கேலிச்சித்திரம் வரையப்பட்டு, சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டமை உலகில் பெரும் கொந்தளிப்பை தோற்றுவித்துள்ளது. முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் குறித்து ஏற்கனவே சர்ச்சைக்குரிய கேலிச் சித்திரங்களை வெளியிட்டு முஸ்லிம்களின் கோபத்திற்கு உள்ளான பிரான்ஸ் சஞ்சிகை தற்போது முஹம்மத் நபியின் வாழ்க்கை வரலாறு குறித்த பிரதியொன்றை வெளியிடவுள்ளதாகவும் அறிவித்துள்ளது.*

*Charlie Hebdo என்ற மதவெறி கொண்ட பிரான்ஸ் பத்தரிக்கை (19-9-2012) அன்று முஹம்மது நபி (ஸல்) அவர்கள் என்று கற்பனையாக சித்திரித்து, நிர்வாண கார்ட்டூனை தனது பத்திரிக்கையில் வெளியிட்டது. நபிகள் நாயகத்தை wheel chairல் தள்ளிக் கொண்டு செல்வது போன்று அட்டைப்படத்தையும் வடிவமைத்துள்ளது. இவ்வாறு வெளியிட வேண்டாம் என வேண்டப்பட்டும் அதெல்லாம் நிறுத்த முடியாது எனக் கூறி, முஹம்மது நபி (ஸல்) அவர்கள் என்று சித்திரம் இல்லாத அந்த மாமனிதருக்கு நிர்வாணக் கார்டூன் என்று ஒரு படத்தை தனது பத்திரிக்கையில் வெளியிட்டு தனது வக்கிரத்தை வெளிப்படுத்தியுள்ளது. இதனால், முஸ்லிம்கள் கொந்தளிக்க ஆரம்பித்த போது, பிரான்ஸ் அரசாங்கம் தற்காப்பு நடவடிக்கையாக நாடெங்கிலும் உள்ள அதன் தூதரகங்களுக்கும் பள்ளிகளுக்கும் விடுமுறை அளிக்குமாறு உத்தரவிட்டு தனது கோழைத்தனத்தை வெளிப்படுத்தியது.*

*சார்லி ஹப்டோ என்ற இந்த சஞ்சிகை கடந்த 2006 இல் முஸ்லிம் உலகில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்திய டென்மார்க் பத்திரிகை வெளியிட்ட கேலிச் சித்திரத்தை மீள பிரசுரித்து, அப்போதும் தனது வக்கிர உணர்வை வெளிப்படுத்தியது. 2011 இல் முஹம்மத் நபி தொடர்பில் மேலும் கேலிச் சித்திரங்களை வெளியிட்டதைத் தொடர்ந்து, இந்த சஞ்சிகையின் அலுவலகம் பெட்ரோல் குண்டு தாக்குதலுக்கு இலக்கானது. கடந்த ஆண்டில் இஸ்லாத்தை இழிவுபடுத்திய அமெரிக்கத் திரைப்படத்தையொட்டி, முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் குறித்து மேலும் பல கேலிச் சித்திரங்களை வெளியிட்டது.*

*2005களில் டென்மார்க் பத்திரிகை, முஹம்மத் நபி (ஸல்) அவர்களை வெடிகுண்டுத் தலைப்பாகை அணிந்தவராக சித்திரித்து, அதன் மூலம் பயங்கரவாதத்தை இஸ்லாத்துடன் நேரடியாகத் தொடர்புபடுத்தி வெளியிட்ட ஒரு கார்டூனால், முஸ்லிம்கள் மிகவும் கொதித்துப்போனார்கள். ஐரோப்பாவிலும் மத்திய கிழக்கிலும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்*

*நடந்தன. உணர்ச்சிவசப்பட்ட சில முஸ்லிம்களால் மேற்குலக நாடுகளின் சில தூதரகங்கள் தாக்கப்பட்டன. அதனால், கிலி கொண்ட கேலிச் சித்திர ஓவியர்கள் சிலர் ஓடி ஒழிந்து, தலைமறைவானார்கள்.*

## *முஹம்மத் (ஸல்) அவர்களை இழிவுபடுத்துவதன் பின்னணி*

*இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் பரிசுத்த ஆளுமையை மாசு படுத்தும் வகையில்,தொடர்தேர்ச்சியான மேற்குலகின் செயற்பாடுகள், முஸ்லிம் உலகில் அதற்கு எதிரான குரலை மிகப் பலமாக ஒலிக்கச் செய்துள்ளது. முஹம்மத் (ஸல்) அவர்களைப் புரிந்து கொண்ட நல்ல உள்ளம் படைத்த அனைவரும் கருத்து சுதந்திரம் என்ற பெயரில் புரியப்படும் மேற்கின் இந்த இழிசெயலை வன்மையாகக் கண்டிக்கின்றனர்.*

*இறைத்தூதரின் புனிதத் தன்மையை மாசுபடுத்தும் குப்ரின் மதங்களின் கூட்டு முயற்சி அண்மைக் காலத்தில் தோன்றிய ஒரு செயல்பாடு அல்ல. அதற்கு ஒரு நீண்ட வரலாறு உள்ளது. இஸ்லாத்தின் துவக்க நாட்களிலும் இது நடந்ததை அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.*

قَدْ نَـعْلَمُ اِنَّهٗ لَيَحْزُنُكَ الَّذِىْ يَقُوْلُوْنَ فَاِنَّهُمْ لَا يُكَذِّبُوْنَكَ وَلٰـكِنَّ الظّٰلِمِيْنَ بِاٰيٰتِ اللّٰهِ يَجْحَدُوْنَ

*(நபியே!) இவர்கள் (புனைந்து) கூறுபவை திண்ணமாக உம்மைக் கவலையில் ஆழ்த்துகின்றன என்பதை நாம் அறிவோம். ஆனால், உண்மையில் அவர்கள் உம்மைப் பொய்யரென்று தூற்றவில்லை; மாறாக அல்லாஹ்வின் வசனங்களையே இவ்வக்கிரமக்காரர்கள் மறுக்கின்றனர். (அல்குர்ஆன் : 6:33)*

وَلَقَدْ كُذِّبَتْ رُسُلٌ مِّنْ قَبْلِكَ فَصَبَرُوْا عَلٰى مَا كُذِّبُوْا وَاُوْذُوْا حَتّٰٓى اَتٰٮهُمْ نَصْرُنَا ۚ وَلَا مُبَدِّلَ لِكَلِمٰتِ اللّٰهِ ۚ وَلَقَدْ جَآءَكَ مِنْ نَّبَاِى الْمُرْسَلِيْنَ

*உமக்கு முன்னரும் தூதர்கள் பலர் பொய்யரென்று தூற்றப்பட்டுள்ளார்கள். ஆனால், நம்முடைய உதவி அவர்களிடம் வரும் வரை, பொய்யர்கள் என்று தாம் தூற்றப்பட்டதையும் பொறுமையுடன் அவர்கள் சகித்துக் கொண்டிருந்தனர். அல்லாஹ்வின் வாக்குகளை மாற்றுவதற்கான வல்லமையுடையவர் எவருமிலர். இன்னும் முந்திய நபிமார்(களுக்கு ஏற்பட்ட நிலைமை)களின் செய்திகள் உமக்குக் கிடைத்தே உள்ளன.(அல்குர்ஆன் : 6:34)*

*இதேபோல், மேற்குலகில் கிறிஸ்தவ மதம் மேலாதிக்கம் செலுத்திய காலத்திலும் இறைத் தூதரை இழிவுபடுத்தும் நடவடிக்கை தொடர்ந்தது. மேற்கில் மத உணர்வுகள் மங்கி, மதச்சார்பின்மை ஆதிக்கம் செலுத்தும் இன்றும் இது நிகழ்கிறது.*

*இஸ்லாத்திற்கு எதிரான மேற்குலகின் இந்த கருத்துப் போராட்டம், இஸ்லாத்தின் வேகமான பரவலுடன் ஆரம்பித்தது. கிறிஸ்துவ ஆதிக்கத்திலிருந்த சிரியா, எகிப்து போன்ற நாடுகளில் இஸ்லாமிய ஆட்சியின் வேகமான பரவலை கண்டு அச்சமடைந்த கிறிஸ்தவ மதகுருக்கள் இஸ்லாத்தையும் இறைத்தூதரையும் மாசு படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.*

*சிரியாவைச் சேர்ந்த* John of Damascus *என அழைக்கப்பட்ட ஜோான் பாதிரியார் இதன் முன்னோடியாக விளங்கினார். இவர் இஸ்லாம் என்பது கிறிஸ்துவ மதத்தின் திரிபு என்ற கருத்தை முன் வைத்தோடு, முஹம்மத் என்ற பெயரை Mahound என மாற்றி, நபியவர்களை கேலிக்குள்ளாக்கும் பல இழி செயல்களில் ஈடுபட்டார். நபியவர்கள் காமுகன் எனவும் இஸ்லாம் வாளின் மதம் எனவும் அவர் புனைய முனைந்தார்.*

*இஸ்லாத்திற்கு எதிரான மேற்குலகின் கருத்து போராட்டத்தின் அடுத்த கட்டம் கிறிஸ்துவுக்குப் பின் 1096 -1271 இடையில் நடைபெற்ற சிலுவைப் போரைத் தொடர்ந்து ஆரம்பித்தது. அதனைத் தொடரந்து,ஸ்பைனில் இஸ்லாத்தின் ஆதிக்கம் ஐரோப்பாவில் நிலத்தை உஸ்மானிய ஆட்சிப் பரவல் என்பன கிறிஸ்தவ உலகிற்கு முஸ்லிம்களுக்கும் இடையில் நிகழ்ந்த மோதல்களாக நோக்கப்படுகிறது.*

*இஸ்லாத்தின் வேகமான பரவலும் விரிந்த வெற்றியும் ஐரோப்பாவிற்குள் உஸ்மானியர்களின் பிரவேசமும் கிறிஸ்தவ உலகை அச்சமடையச் செய்ததது. இதனால், தோமஸ் அக்யுனாஸ்,பெட்ரோ டீ அல்பென்ஸோ போன்ற சில கிறிஸ்தவர்கள் இஸ்லாத்தை இழிபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.*

*சமயசார்பற்ற நிலையை நோக்கி ஐரோப்பா நகரும் சம காலப் பிரிவிலும் இங்கு இஸ்லாம் வளர ஆரம்பித்துள்ளது. உலகளவில் ஏற்பட்டுவரும் இஸ்லாமிய எழுச்சியும், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் மிக வேகமாக நடைபெறும் இஸ்லாத்தின் பரவலும் கிறிஸ்தவ உலகில் இஸ்லாத்தைப் பற்றிய அச்ச நிலையைத் தோற்றுவித்துள்ளது இதன் விளைவாக இஸ்லாத்தை மாசுபடுத்தும் வகையில் புரியப்படும் அண்மைக்கால செயல்பாடுகளாகும்.*

சோவியத் ரஷ்யாவின் உடைவுடன் வரலாறு தனது பணியை முடித்துவிட்டது. இனி முதலாளித்துவம் உலகை ஆளும் என்று புகயாமா The End of Historyல் எழுதினார். அக்கருத்தை மறுதலித்து எதிர்காலத்தில் மேற்குலகின் எதிரியாக இஸ்லாத்தை இனங்காட்டி, நாகரிகங்களின் மோதல் The Cash Of Civilization என்ற கோட்பாட்டை முன்வைத்தார், சமுவெல் பி.ஹன்டிங்கடன்.

அத்தோடு, மேற்கத்திய ஊடகங்கள் Green Peril பச்சை அபாயம் இஸ்லாமியக் குண்டு Islamic Bomb இஸ்லாமிய பயங்கரவாதம் Islamic Terror என்ற சொற்றொடர்களை உருவாக்கின. இதன் ஒரு வளர்ச்சி கட்டமே இழிவுபடுத்தும் வகையிலான அண்மைய கேலிச்சித்திரங்களும் நபி (ஸல்) அவர்களைத் தவறாக சித்திரிக்கும் திரைப்படங்களும் நாவல்களுமாகும்.

## பாடசாலையில் கேலிச்சித்திரம்

தற்போது, பிரான்ஸின் ஒரு பாடசாலையில் முஸ்லிம் மாணவர்களை வெளியேற்றிவிட்டு நபி (ஸல்) அவர்களைக் கேலிச் சித்திரமாகக் காட்சிப்படுத்தி, சாமுவேல் பேட்டி என்னும் வரலாறு மற்றும் புவியியல் பாடங்களுக்கான ஆசிரியர் பாடம் நடத்தியுள்ளார்.

கேலிச்சித்திரத்தை வகுப்பறையில் காட்டியது தொடர்பாக பல இஸ்லாமிய பெற்றோர், சாமுவேல் பேட்டி மீது பள்ளி நிர்வாகத்திடம் புகார் தெரிவித்தனர். பெற்றோர்களில் ஒருவர் இதுகுறித்து சமூக ஊடகத்தில் பதிவிட்டதுடன் அவரை பணியில் இருந்து நீக்க வேண்டும் என்றும் பெற்றோர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். எனினும், எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால், ஆத்திரம் அடைந்த சிலர் அந்த ஆசிரியரைக் கொலை செய்துவிட்டனர். இச்செயற்பாட்டை இஸ்லாமிய அறிஞர்கள் கண்டித்துள்ளார்கள்.

## பிரான்ஸின் ஜனாதிபதியின் கருத்துச் சுதந்திரம்

சாமுவேல் பேட்டிக்குக இரங்கள் தெரிவித்த பிரான்ஸின் ஜனாதிபதி, ‘கேலிச்சித்திரம் வரைவது எமது உரிமை, அதைத் தடுக்க முடியாது.கார்ட்டூன் வரைவது தொடரும்‘ என்று ஆணவமாகக் கருத்தத் தெரிவித்திருந்தார்.

மரணித்து பல நூற்றாண்டுகள் கடந்தும் இதுவரை எந்த சித்திரமும் இல்லாத ஒரு மனிதருக்கு கார்ட்டூன் வரையலாமா? உலகில் பெரும் எண்ணிக்கையிலான மக்ககள் அவரை எந்த சித்திரமும் இல்லாமல் தமது உயிரிலும் மேலாய் மதிக்கின்றார்கள். அவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தலாமா? என்ற சாதாரண அறிவற்றவராக பிரான்ஸின் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோங் காணபடுவதாக கண்டனக் குரல்கள் எழுந்துள்ளன. அத்தோடு, பிரான்ஸ் பொருட்களை புறக்கணிக்குமாறு மத்திய கிழக்கு நாடுகள் உட்பட பல முஸ்லிம் நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இது பேச்சு சுதந்திரம், கார்டூன் கருத்து சுதந்திரம் எனவே, நபிகள் நாயகத்தின் கார்ட்டூனை தடை செய்ய முடியாது என சவடால் விட்ட பிரான்ஸ் நாட்டு பிரதமர், இதை எதிர்த்து முஸ்லிம்கள் கருத்து தெரிவிக்க தடை விதித்துள்ளார். என்ன கொடுமை இது?

ஆபாசத்தை அவிழ்த்து விடுவார்களாம், மேன்மை தங்கிய நபிகள் நாயகத்தை அவமதிப்பதற்கு அனுமதிப்பார்களாம். அதை கண்டிப்பதற்குத் தடைவிதிப்பார்களாம். அமெரிக்காவை மிஞ்சும் அளவிற்கு பிரான்ஸ் நாட்டு அரசு கடுமையான முஸ்லிம்கள் வீரோத போக்கைக் கடைபிடிக்கின்றது என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

பிரான்ஸ் நாட்டின் உள்துறை மந்திரி *Manuel Valls* கூறுகையில், நபிகள் நாயக்தின் நிர்வாண கார்ட்டூனை கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்வதற்கு திட்வட்டமாக தடை செய்யப்பட்டுள்ளது. மீறினால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

*பிரானஸ் நாட்டின் ஜனாதிபதியை அல்லது முக்கிய பிரமுகரை, அவரது மனைவியை அவரது தாயை அவரது தந்தையை நிர்வாண கோலத்தில் சித்திரித்தால் அதை பிரானஸின் அதிகார பீடம் அங்கீகரிக்குமா? ஒரு நாட்டிற்கு மட்டுமுள்ள ஜனாதிபதியைக் கேலி செய்தால் அதை சகிக்காத இவர்கள் உலக மக்களில் பெரும் எண்ணிக்கையான மக்களின் உயிரைவிட மேலான மதிப்பிற்குரியவரை அநாகரிகமாகச் சித்திரிப்பதை சகித்துக் கொள்ள வேண்டுமாம். இது எந்தவகை ஜனநாயகம்? இது எந்தவகை கருத்தியல் சுதந்திரம்?*

*எல்லா இறைத் தூதர்களையும் மதிக்கும் உலக முஸ்லிம்கள் தங்கள் உயிரைவிட மேலாக மதிக்கும் இறுதி இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களை யாராவது கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் கேலி செய்வது, அவர்கள் குறித்து தவறான விமர்சனம் செய்வது போன்ற செயல்களை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.*

*ஒரு நாட்டில் வாழும் சிறுபான்மையினர் தங்கள் மீது இழைக்கப்படும் அநியாயங்களுக்கு எதிராக குரல் கொடுக்க உதவுவதுதான் கருத்துச் சுதந்திரமே தவிர, மற்ற மதத்தினரின் உணர்வுகளை புண்படுத்துவது அல்ல" என்பதை ஜனநாயக முகமூடியை அணிந்துள்ளவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.*

*இஸ்லாமிய மார்க்கத்திற்கு எதிராக கருத்துத் தெரிவித்ததாகக் கூறி முஸ்லிம் மக்கள் உள்பட பல்வேறு நாடுகளின் தலைவர்களும் பிரான்ஸ் ஜனாதிபதி எமானுவேல் மக்ரோங்குக்கு தங்களது கண்டனத்தை தெரிவித்து வருகின்றனர்.*

## கேலிச் சித்திரங்கள்

*Cartoons எனப்படுபவது கேலிச் சித்திரங்கள், அல்லது கேலிப் படங்கள். நகைச்சுவையைத் தூண்டும் வண்ணம் வரையப்படும் சித்திரங்கள் ஆகும். பல சொற்களில் தலையங்கம் எழுதி உணர்த்த முடியாத கருத்துக்களைக் கூடக் கேலிச் சித்திரங்களும் கருத்துப் படங்களும் எளிதாக உணர்த்துகின்றன. சமுதாயம், சமயம், அரசியல், பொருளாதாரத் துறைகளில் உள்ள குறைகளை நகைச்சுவையுடன் உணர்த்தும்படி கேலிப்படங்கள் வரையப்படுகின்றன.. தமிழில் மொழிப் பத்திரிகைகளிலும் இதழ்களிலும் கேலிச் சித்திரங்கள் வெளி வருகின்றன.*

## கேலிச்சித்திரத்தின் வரலாறு

*இத்தாலி மொழியில் Cartoon என்பது கெட்டியான காகிதத்தைக் குறிக்கும். கெட்டியான காகிதங்களில் தான் அப்போது அங்கே ஓவியங்கள் வரைவார்கள். 1921 ம் ஆண்டில் பிரிட்டனின் புதிய பாராளுமன்றக் கட்டடத்தை அலங்கரிக்க ஓவியர்களிடையே போட்டி ஒன்று நடாத்தப்பட்டது. அந்தப் போட்டிக்காக (கெட்டியான காகிதங்களில்) வரையப்பட்ட பல ஓவியங்கள் நிராகரிக்கப்பட்டன. கேலிச் சித்திரங்கள் போன்று இருந்த - நிராகரிக்கப் பட்ட சில ஓவியங்களை பஞ்ச் என்ற பத்திரிகை ஒன்று பஞ்ச் Cartoon என்ற தலைப்பில் ஒவ்வொன்றாகப் பிரசுரித்தது. காலப் போக்கில் இவ்வித கேலிச்சித்திரங்களுக்கு Cartoon என்ற பெயர் நிலைத்து விட்டது*

## கேலிச்சித்திரத்தின்நோக்கம்

*கேலிச்சித்திரங்கள் அதிகமாக சில மனிதர்களை, அவர்களின் கொள்கைகளைக் கேலி செய்யும் விதமாக வரையப்படுகின்றன. குறிப்பாக கேலி செய்யப்படுபவர்கள் படங்களை நகைச்சுவையுணர்வுடன் அவர்களின் உருவம் அனைவரும் அறியும் வழியில் வரையப்படுகிறது. இந்தக் கேலிச் சித்திரங்கள் பிறர் மனதைப் புண்படுத்தாத வழியில் வரையப்பட வேண்டும். வரையப்படும் படங்கள் உண்மையின் அடிப்படையிலும், மக்களுக்கு சில செய்திகளைக் கூறும் வகையிலும், அதே வேளை சிந்திக்கத் தூண்டும் வகையில் வரையப்படுவது அவசியமாகும் எனக் குறிப்பிடப்படுகிறது.*

## விமர்சன உரிமை

*விமர்சிக்கும் உரிமை அனைவருக்கும் உள்ள பொதுவான சுதந்திரங்கள் ஒன்றாகும். ஆனால், புனிதர்களாக மதிக்கப்படுபவர்களைக் கொச்சைப்படுத்தல், அவமதித்தல், நிந்திக்கும் கேலிச்சித்திரங்கள் மூலம் மனங்களை புண்படுத்துதல் என்பன அறிவியல் விமர்சனங்கள் அல்ல. இந்த உண்மைகளை அறிந்து சுதந்திரம் எது இழிவுபடுத்தல் எது என்பதை வேறுபடுத்திப் பார்க்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.*

*பிரான்ஸ் அரசு சுதந்திரம் என்ற கருத்தியலுக்கு வழங்கும் பெறுமானங்கள் பற்றி முஸ்லிம் உலகம் ஆச்சரியப்படுகிறது. முஸ்லிம்கள் தங்களது உயிரிலும் மேலாக மதிக்கும் நபியைக் கேலிபண்ணுவதுதான் உங்கள் சுதந்தரமா? அத்தோடு, இஸ்லாத்தின் புனிதங்களை அவமானப்படுத்துவதை தடுக்காது அதனை ஊக்குவிப்பது எந்தவகை கருத்தியல் சுதந்திரமாக இருக்க முடியும்?*

*சிந்தனா ரீதியிலான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மக்கள் மனங்கவரும் சொற்பொழிவுகள் மூலம் உணர்ச்சிகளை தூண்டி கிளர்ச்சிகளை ஏற்படுத்தி, பர்தா அணிந்த பெண்களைத் தாக்குவதாலோ அப்பாவி நிராயுதபாணி மக்கள் மீது வக்கிரத்தனமாக யுத்தம் தொடுப்பதால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை.*

*மேற்குலகு பொய்யான கற்பனையில் வடிவமைத்துள்ள இஸ்லாம் பற்றிய பீதிக்கு சேவை செய்வதன் மூலம் சிந்தனைசார் பிரச்சினைகளை தீர்க்க முடியாது. பள்ளிவாசல்களில் மக்களை பயமுறுத்துவதாலோ அவற்றை இழுத்து மூடுவதாலோ பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது. மாறாக ஆழ்ந்த சிந்தனை, துல்லியமான புரிதல், கண்ணியமான அணுகுமுறை, திட்டமிட்ட அமைதியான செயற்பாடுகள் மூலம் மாத்திரமே இந்த பிரச்சினைகளை தீர்க்க முடியும்.*

*அந்தவகையில் சர்வதேச முஸ்லிம் அறிஞர்கள் ஒன்றியத்தின் பொதுச் செயலர் கலாநிதி அலி முஹியத்தின் கரதாகி அவர்கள் பிரான்ஸ் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிததம் மிக முக்கிய செய்திகளை உள்ளடக்கியுள்ளது.*

*'முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மனிதகுலத்தின் விமோசனத்திற்காக வந்த மகத்தான இறுதித் தூதர். சிலர் அந்தக் கருணை வடிவமான அன்புத் தூதரை அவமானப்படுத்தி, தூசிக்க முயலுகின்றனர். வேறு சிலர் எரியும் நெருப்பில் எண்ணை ஊற்றும் கருத்துக்களால் அதற்கு ஊக்கமளிக்கின்றனர். உண்மையில் நபிகளார் அறிவின் தூதர். வாசிப்பீராக! என்பதே அவர் கொண்டு வந்த தூதின் முதல் வார்த்தை. அவர் அகிலத்தாருக்கு அருளாய் வந்தவர். மகத்தான பண்பாடுகளின் வடிவமாய் அமைந்தவர். இன, மத பேதங்களன்றி அவருடைய நற்குணங்களுக்கு உலக அறிஞர்கள் சான்று பகன்றுள்ளனர். நூறு மாமனிதர்களின் வரலாற்றை எழுதிய மைக்கல் ஹார்ட் என்பவர் முஹம்மத் (ஸல்) அவர்களைத் தான் முதன்மையானவராக தெரிவு செய்தார். உலக மக்களில் சுமார் 200 கோடிப் பேர் தங்களது நபியாக ஏற்றுப் பின்பற்றும் தூதர் முஹம்மத் இவர் தான்.*

*மனிதம் காக்க வந்த தூதர் முஹம்மதை கொச்சைப்படுத்தும் கேலிச்சித்திரங்களை பரப்புவதன் மூலம் என்ன பயன் காணப்போகிறீர்கள்? பொதுமக்களையும் இளைஞர்களின் உணர்வுகளையும் பிரான்ஸுக்கு எதிராக தூண்டுவதன் மூலம் என்ன நன்மை கிடைக்கப் போகிறது? இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் 6 மில்லியன் ஐரோப்பிய யூதர்கள் ஜெர்மனியில் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்ட பெரும் இன அழிப்பு (ஹாலோகோஸ்ட்) குறித்து பிரான்ஸ் ஏன் இதுவரை கேள்விக்குட்படுத்தவில்லை.*

*மேற்கத்தேய சிந்தனையில் இன, நிற பாகுபாட்டை மீறுவது குற்றமாக பார்க்கப்படுகிறது. ஆனால், மதத்தையும் அதன் புனிதங்கள் மீதும் அத்துமீறி அவமதிப்பது ஏன் குற்றமாக கருதப்படுவதில்லை? ஆகக் குறைந்தது அதனை தடைசெய்வதும் இல்லையே, அது ஏன்?*

இனவாதம் மற்றும் வெறுப்புப் பேச்சை தூண்டுவது ஒருபோதும் தனிநபர் சுதந்திரமாகாது. அதன் மூலம் பிளவும், பிரிவினையும் தான் உருவாகும். அதன் விளைவுகள் அனைவருக்கும் பயங்கர ஆபத்தாக அமையும் என்பது எல்லோரும் அறிந்த விடயமே. எனவே அடுத்தவர்களின் கண்ணியத்தையும் உணர்வுகளையும் கீறிக் கிழிக்கும் சுதந்திரம் கண்டிப்பாக தடுக்கப்பட வேண்டும். நபிகளார் மீது முஸ்லிம்கள் வைத்துள்ள அன்புணர்வு வலிமையானது. முஸ்லிம்கள் தங்கள் உயிரிலும் மேலாக நபி முஹம்மத் (ஸல்) அவர்களை விரும்புகிறார்கள். அவ்வாறுதான் ஏனைய அனைத்து நபிமார்களையும் நேசிக்கின்றார்கள். அதில் அவர்கள் வேறுபாடு காட்டுவதில்லை.

இஸ்லாம் கருணையின் மதம். அது அமைதியின் மார்க்கம். உலகத்திற்கு பாதுகாப்பு அரண். எனவே, இஸ்லாம் பயங்கரமானது என்றோ, இனவாதம் கொண்டது என்றோ தேசியவாதம் பேசும் மதம் என்றோ வர்ணிப்பது அபத்தமானது. திருக்குர்ஆனைப் படிக்கும் யாரும் அப்படி கூறமாட்டார்கள். இஸ்லாம் இயற்கையின் மார்க்கம். இயல்புகளுக்கு முரண்படாத இனிய மார்க்கம். அதனால் தான் ஆயிரமாயிரம் சவால்கள் வந்த போதிலும் பந்தலில் கொடி படர்வது போல் பரவுகிறது.

கடந்த 20.10.2020 செவ்வாய் மாலை இரண்டு ஹிஜாப் அணிந்த முஸ்லிம் பெண்கள் ஈபிள் கோபுரத்தை சுற்றி உலா வரும் போது இரண்டு ஐரோப்பிய பெண்களின் வெறித்தனமான கத்திக் குத்துக் தாக்குதல்களுக்கு உட்பட்டார்கள். இந்த வன்முறை தாக்குதலை மேற்கொண்ட தீவிரவாதிகள் அரபு இனத்தையே இழுத்து திட்டித் தீர்த்தார்கள் என தாக்கப்பட்ட பெண்மணியின் வாக்கு மூலம் கூறுகிறது. இந்த தீவிரவாத செயற்பாட்டிக்கு பின்னால் தூண்டல் காரணியாக இருந்தது கிறிஸ்தவம் என்றோ அல்லது மதச்சார்பின்மை கொள்கை என்றோ முஸ்லிம்களாகிய நாம் குற்றம் சாட்ட மாட்டோம். அப்படி குற்றம் சாட்டுவதும் பொருத்தமற்றது..

இதே போன்றுதான் நபிகளாரை அவமானப்படுத்தும் கேலிச்சித்திரங்களை வகுப்பறையில் காண்பித்த ஜீன்-மைக்கேல் பிளாங்கர் எனப்படும் ஆசிரியரைக் கொலை செய்தவர் ஒரு முஸ்லிம் வாலிபன் என்பதற்காக இஸ்லாத்தை நோக்கி சுட்டுவிரல் நீட்டுவதையும் நாம் மறுதலிக்கின்றோம். இது எந்தநிலையிலும் பயங்கரவாதத்தை நியாயப்படுத்தியதாக அமையாது. ஏன் எதற்காக இது நடந்தது என அதற்கான காரணங்களை தேடுவது அவசியமானதே. ஐரோப்பாவில் உள்ள பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான அமைப்பின் உறுப்பு நாடுகள் பெரும்பாலும் பயங்கரவாதத்தின் அனைத்து வடிவங்களையும் வெளிப்பாடுகளையும் கண்டித்துள்ளன. மேலும், சர்வதேச மனித உரிமைச் சட்டத்தின் பிரகாரம் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுமாறும் அறைகூவல் விடுத்துள்ளன.

நாம் மீண்டும் மீண்டும் இங்கு வலியுறுத்த விரும்புவது இஸ்லாத்தை தீவிரவாதத்துடன் இணைத்துப் பார்க்காதீர்கள். உலகளவில் எதாவது ஒரு நெருக்கடி வரும்போது அதனை மதத்துடன் முடிச்சுப் போட்டுப் பார்க்காதீர்கள். இஸ்லாத்தை அல்லது ஏனைய மதங்களை பயங்கரவாதத்துடன் பட்டியல்படுத்தி பார்க்காதீர்கள். இவை யாவும் பிழையான போக்காகும். இத்தகைய பிழையான பார்வைகள் குறிப்பிட்ட அந்த மதத்தை நிந்தித்து அவமதிப்பதாகவே அமையும். மேலும் அது சமூகத்தில் உள்ள தீவிரவாதிகளுக்கு களம் அமைத்துக் கொடுத்ததாகவே கருதப்படும். ‘

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். சித்திரம் இருந்தால்தான் கேலிச் சித்திரம் வரைய முடியும். இறுதித் தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு எந்தச் சித்திரமும் இல்லை. ஈஸா நபிக்கு அவர்களது அன்னைக்கும் உருவம் கற்பித்து கிறிஸ்தவர்கள் வழிபட்டு வருகின்றனர். எனினும், முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களுக்கு எதிர்வினையாற்றுவதற்காகக் கூட அவர்களைக் கேலியாக சித்திரிக்கமாட்டார்கள். ஏனெனில், ஈஸா (அலை) அவர்களையும் அவர்களது

*தாயாரையும், முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் போன்றே கண்ணியமானவர்களாக முஸ்லிம்கள் மதிக்கின்றார்கள்.*

يُرِيْدُوْنَ لِيُطْفِــــُٔوْا نُوْرَ اللّٰهِ بِاَ فْوَاهِهِمْ وَاللّٰهُ مُتِمُّ نُوْرِهٖ وَلَوْ كَرِهَ الْكٰفِرُوْنَ

*இவர்கள், அல்லாஹ்வின் ஒளியைத் தம் வாய்களால் ஊதி அணைத்துவிட விரும்புகின்றார்கள். ஆனால், அல்லாஹ்வின் முடிவு என்னவெனில் தன் ஒளியை முழுமையாகப் பரப்பியே தீர்வது என்பதாகும்; இறைநிராகரிப்பாளர்களுக்கு அது எவ்வளவு வெறுப்பாக இருந்தாலும் சரியே! (அல்குர்ஆன் : 61:8)*

*(கார்டூனும் கருத்துச் சுதந்திரமும் என்ற தொனிப்பொருளில் எம்.ஏ.ஹபீழ் ஸலபி அவர்கள் 05-11-2020 மெல்வத்தை மஸ்ஜிதுன் நூரில் நிகழ்த்திய முதல் ஜும்ஆப் பேருரையின் தொகுப்பாக்கம்.)*